**உதவி அமலாக்க அலுவலர், சேலம் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திருமதி.ந.ஸ்ரீவிஜயலட்சுமி, டி.எச்.டெக்.,**
**உதவி அமலாக்க அலுவலர், சேலம்.**

ந.க.எண் 318/2019/அ1, நாள் : 15.11.2021

**பொருள்:** நிர்வாகம் – கைத்தறி மற்றும் துணிநூல் – உதவி அமலாக்க அலுவலர் அலுவலகம், சேலம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (தொகுதி IV) – தமிழ்நாடு அரசு பணியார் தேர்வாணையம் வாயிலாக நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு துறையில் பணியமர்த்தப்பட்டது – பணிநியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. சென்னை, கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 6089/2019/இ2–1, நாள் : 22.02.2019.
2. அரசாணை எண் 191, நாள் : 01.02.2015.
3. சென்னை, கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அவர்களின் குறிப்பாணை ந.க.எண் 6089/2019/இ2, நாள் : 26.10.2021.

---

பார்வை 1–ல் கண்டுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகளின் படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (தொகுதி IV) – ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவியில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 6 தனியர்களுக்கு இளநிலை உதவியாளர்களாக இத்துறையின் கீழ் சரக வாரியாக பணிநியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டது.

மேற்கண்ட செயல்முறைகளில் திருமதி.மு.தீபா, இளநிலை உதவியாளருக்கு தனியரது சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிக்கை பெறப்பட்ட பின்னரே பணிவரன்முறை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது தனியரது சாதிச்சான்றிதழ் குறித்த மெய்த்தன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளதால் பார்வை 2 மற்றும் 3–ல் கண்டுள்ள அரசாணை மற்றும் கைத்தறி ஆணையர் அவர்களின் குறிப்பாணையின்படி, தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க்கண்ட அட்டவணை கலம் எண் 4–ல் தெரிவிக்கப்பட்ட நாளான 28.02.2019 முற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது. சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர் பணி வரன்முறைப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ய வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | இளநிலை உதவியாளரின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைப்படுத்தப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருமதி. மு.தீபா | 28.02.2019 முற்பகல் | 28.02.2019 முற்பகல் |

(ஓம்)ந.ஸ்ரீவிஜயலட்சுமி,
உதவி அமலாக்க அலுவலர்

//உண்மை நகல்//

உதவி அமலாக்க அலுவலர்,
சேலம்.

பெறுநர்

திருமதி. மு.தீபா,
இளநிலை உதவியாளர்

நகல்

1. கைத்தறி ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பணிப்பதிவேடு
3. இருப்புக்கோப்பு